NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu*, p2
**Date:** 9 March 2015

# மருந்துகளை தவறான முறையில் உட்கொள்ளும் முதியவர்கள்; உதவ முன்வந்த இளையர்கள்

நிறங்களை அடையாளமாக வைத்து மாத்திரை உட்கொள்ளும் போக்கு இன்னமும் சில முதியவர்களிடையே காணப்படுகிறது.

"இது, முதியவர்களிடம் நிலவும் மிக முக்கிய பிரச்சினை," என்கிறார் இருபது வயது புனிதா.

தேசிய பல்கலைக் கழகத்தில் மருந்தகத் துறையின் முதல் ஆண்டு மாணவியான அவர், முதியவர்களுக்கு மருந்துகளை உட்கொள்ளும் முறைகளை விளக்கினார்.

"முதல் முறையாகத் தொண்டூழியத் திட்டத்தில் பங்கேற்றபோது மருந்துகளை முறையாக உட்கொள்ளாத முதிய மாது ஒருவரை சந்தித்தேன். தனியாகத் தங்கியிருக்கும் அவருக்கு நினைவூட்ட யாரும் இல்லை. உயர் ரத்தம் அழுத்தம், நீரிழிவு நோய் போன்றவற்றால் பாதிக்கப்பட்டவர்கள் முறையாக மருந்துகளை எடுத்துக் கொள்ளவில்லை என்றால் உடல் நலத்திற்கு கடும் பாதிப்பு ஏற்படும்," என்றார் புனிதா.

"நிறங்களை அடிப்படையாக வைத்து அவர் மருந்துகளை எடுத்து வருகிறார். இத்தகைய சம்பவங்கள் முதியவர்களிடம் நிலவும் முக்கிய பிரச்சினைகளைக் காட்டுகிறது என்றும் அவர் சொன்னார்.

"உங்கள் மருந்துகளைத் தெரிந்து கொள்ளுங்கள், சரியாகச் செய்யுங்கள் @ நார்த் வெஸ்ட்," என்ற தொண்டூழியத் திட்டத்தின் ஓர் அங்கமாக நேற்று முதியவர்களுக்கு மருந்துகளைப் பற்றி புனிதா விளக்கினார்.

இந்தத் திட்டத்தினால் புக்கிட் பாஞ்சாங்கில் வசிக்கும் 100 முதியவர்கள் தாங்கள் உட்கொள்ளும் மருந்துகளையும் அவற்றின் அவசியத்தையும் தெரிந்து கொண்டனர்.

'என்யுஎஸ்' மருந்தகர்கள் சங்கம், வடமேற்கு சமூக மேம்பாட்டு மன்றம் ஆகியவை இந்தத் திட்டத்திற்கு ஏற்பாடு செய்திருந்தன.

எட்டாவது முறையாக நடைபெறும் இந்தத் தொண்டூழியப் பணியில் பத்து பதிவு செய்யப்பட்ட மருந்தகர்களும் மருந்தகத்துறையில் படிக்கும் 40 மாணவர்களும் ஆர்வமுடன் ஈடுபட்டனர்.



முதியவர்களுக்கு மருந்துகளைப் பற்றி விளக்கிய தொண்டூழியர்களில் ஒருவரான புனிதா (இடம்). **படம்: மக்கள் கழகம்**

இந்நிகழ்ச்சியில் வடமேற்கு மாவட்ட மேயர் டாக்டர் டியோ ஹோ பின் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

"மருந்தகர்களின் வழிகாட்டலுடன் வடமேற்கு வட்டாரத்தில் வசிக்கும் முதியவர்களுக்கு மருந்துகளை முறையாகப் பயன்படுத்துவதைப் பற்றி மாணவர்கள் விளக்கினர்.

"இது, சமூகத்திற்குத் திருப்பிக் கொடுக்கும் இளையர்களின் முயற்சிகளுக்கு சிறந்த எடுத்துக்காட்டு," என்று திரு டியோ ஹோ பின் சொன்னார்.

கடந்த 2011ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இந்தத் திட்டத்தின் மூலம் சுமார் 1,000 முதியவர்கள் பலன் அடைந்துள்ளனர்.

எதிர்காலத்திலும் முதியவர்களுக்கு சேவையாற்ற இளையர்கள் தங்களுடைய பங்கை ஆற்ற அதிகமானவர்கள் முன்வருவார்கள் என்று டாக்டர் டியோ ஹோ பின் நம்பிக்கை தெரிவித்தார்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.